# அன்பு பகிர்வு இயக்கம்

# செய்தி மலர்

தனிப்பிரதி ₹. 10/-
ஆண்டுச் சந்தா ₹. 100/-
ஆயுள் சந்தா ₹. 1000/-

மலர் :12 இதழ் :11 செப்டம்பர் 2016


பீல் ஆதிவாசி மக்கள் தரிசன பணியில்

# யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்

ஏசாயா 27: 6


ஆசிரியர்.

பேராயர் **வே. தேவதாஸ்**



# உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள். தேவ கிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 3 மாநிலங்களில் பணித்தளத்தில் சுதேச ஊழியர் மாத கூடுகை; வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள்; ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களுக்கான சிறப்பு கூடுகை; சிறுவர்களுக்கான முகாம்களை நடத்த சிறப்பான பயிற்சி தெரிந்தெடுக்கப்பட்ட மூத்த ஊழியர்களுக்கும் நடத்தப்பட்டது.

மேலும் வெள்ளிவிழா சிறப்பு திட்டமான 1000 சுதேச ஊழியர்கள், 1000 ஸ்தர சபைகள், ஒரு லட்ச விசுவாச குடும்பங்களை வழிநடத்தும் திட்டத்திற்கான செயல்பாடுகளை ஜெபத்துடன் பணித்தளங்களில் செயல்படுத்தி வருகிறோம். நீங்களும் வெள்ளிவிழா சிறப்பு திட்டங்களான ஷாலோம் பவன் (குஜராத்) அந்தர்வேலியா பேராலயம் (மத்தியப்பிரதேசம்) ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி (இராஜஸ்தான்) கட்டியெழுப்பப்படவும், இவ்வருடம் 200 கிராம ஆலயங்கள் கட்டப்படவும் ஜெபியுங்கள். இந்த வெள்ளிவிழா திட்டங்களுக்கு சிறப்பு ஆதரவாளர்களாக முன் வரவும்; உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்தவும் அன்புடன் கேட்கிறேன்.

மூன்று மாநிலங்களிலும் 20 கிராமங்களில் ஆலய கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இந்த செப்டம்பர் மாதத்தில் 20 கிராம ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

ஷாலோம் தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள்; பணித்தள ஊழிய அலுவலர்கள், ஷாலோம் முன்னேற்றப் பணியாளர்கள்; ஷாலோம் பிரதிநிதிகள் மற்றும் ஜெபித்து தாங்கும் ஆதரவாளர்களுக்காக ஜெபியுங்கள்.

நாங்களும் குடும்பமாக, ஊழியர்களாக இணைந்து உங்களுக்காக ஜெபித்து வருகிறோம்.

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்." 2 கொரி. 13:14·

**தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,**

(பேராயர்.V. தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
**09377445468**

# யாக்கோபினால் வரும் பலன்

சிறப்பு செய்தி : **சகோ. வே. தேவதாஸ்**

யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும். ஏசாயா 27:6

பிதாவாகிய தேவன் தாம் உலகத்தில் தெரிந்துக் கொண்ட ஆபிரகாமின் சந்ததியான யாக்கோபை இஸ்ரவேலாக அழைத்து ஆசீர்வதித்தது மட்டுமன்றி உலகத்தையே அந்த ஆசீர்வாதத்தின் பலனாக நிரப்ப சித்தம் கொண்டார். இந்த வாக்குத்தத்த செய்தியை ஷாலோம் ஊழிய 25 வருட நிறைவை தேவனுக்கு ஸ்தோத்திரம், செலுத்தும்படியாக 3 மாநிலங்களிலிருந்து கூடி வந்த சுதேச ஊழியர்கள் கூடுகையில் தேவன் தந்த வாக்குத்தத்தமாக இந்த செய்தியை வழங்கின போது ஆவியானவரால் அனைவரும் நிரப்பப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். உங்களுக்கும் இந்த செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**தேவனால் பேர்சொல்லி அழைக்கப்பட்ட இஸ்ரவேல் :** பிதாவாகிய தேவன் ஆபிரகாமை தெரிந்துக் கொண்டு, அழைத்து , ஆசீர்வதித்து பெருகப் பண்ணினார். அது போலவே அவன் குமாரன் ஈசாக்கையும், யாக்கோபையும் அவர்களின் சந்ததியாக தேவன் தெரிந்து கொண்டு ஆசீர்வதித்தார். யாக்கோபை விசேஷமாக அழைத்து உருவாக்கினார். ஏசாயா 43 :1 ம் வசனத்தை வாசித்து பாருங்கள் **இப்போதும் யாக்கோபே உன்னைச் சிருஷ்டித்தவரும்; இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன் உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன்.**

தேவன் யாக்கோபை தாயின் வயிற்றில் சிருஷ்டித்தார். ஒவ்வொரு மனிதனும் இந்த உலகில் தாயின் கர்ப்பத்தில் சிருஷ்டிக்கப்பட்டு மனிதனாக பிறக்கிறான். ஆகவே தாயின் கர்ப்பத்தில் நாம் ஒவ்வொருவரையும் தேவன் சிருஷ்டிக்கிறார். அவர் சிருஷ்டி கர்த்தர். அதன் பின்பு தேவன் சிருஷ்டித்த தம்முடையவர்களை அழைத்து அவர் சித்தப்படி குயவன் கையில் களிமண்ணாக வனைந்து உருவாக்குகிறார்.

யாக்கோபு தன் சுயமான விருப்பப்படி பிறரை ஏமாற்றி வரும் பலனால் பொய் சொல்லி வரும் பலனால் எத்தனாக தன் பிரயாசத்தினால் கிடைத்த பலனால் வாழ்ந்து வந்தான். ஆனால் தேவனை அண்டிப் பற்றிக் கொண்டபோது மிரான்தான் யாக்கோபு என்று தன் வாழ்வினை தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்து தேவனுடைய ஆசீர்வாதத்தை போராடி பெற்று கொள்கிறான். இதைக் குறித்து ஆதியாகமம் 32ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். தேவன் யாக்கோபை இஸ்ரவேல் என்று அழைத்து அவனை ஆசீர்வதித்தார்.

**வேர் பற்றிக் கொள்வதால் உண்டாகும் ஆசீர்வாதம்**

முதலாவது இஸ்ரவேல் ஆசீர்வதிக்கப்பட தேவன் சொல்லும் முதல் ஆலோசனை வேர் பற்றிக் கொள்ள வேண்டும். மரமானது வேர் இறுகப்பிடிக்கும் போது உறுதியாக நிற்க முடிகிறது. இரண்டாவது வேர் ஆழமாக செல்லும் போது தேவையான தண்ணீர் சத்து இவைகளை கிளைகள் அனைத்து இலைகளுக்கும் அனுப்ப முடிகிறது.

யாக்கோபு தேவனால் கொடுக்கப்படும் இஸ்ரவேலின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முதலாவது யாக்கோபு வேர் பற்றிக் கொள்ள வேண்டும்.

தேவனுடன் உறவாடி தேவனோடு ஐக்கியம் கொள்வது தான் வேர் பற்றியிருக்கும் ஜீவியம். ஒவ்வொரு தேவ பிள்ளைகளும்; சபையும்; ஊழியங்களும் கர்த்தருக்குள் வேர்பற்றி உறுதியாக நிற்க வேண்டும். மண்ணுக்கு கீழாக இருக்கும் வேரை பற்றிய வளர்ச்சி மனிதனுடைய கண்களுக்கு தெரியாது. அது போலத்தான் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு, தேவனுடன் உள்ள உறவு பிற மனிதர்களுக்கு, உலகத்திற்கு தெரியாது. ஜெபவாழ்வு; வேதத்தை தியானிக்கும் வாழ்வு, அந்தரங்க வாழ்வில் பரிசுத்தமான வாழ்வு; அபிஷேகத்தில் நிறைவான வாழ்வு, தேவனிடத்தில் அன்பு கூறும் வாழ்வு போன்ற இவைகள் மூலமாகத்தான் நாம் வேர்பற்றி வாழ முடியும். இவைகளை குறித்து நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். சில இடங்களில் மழை அதிகமாக பெய்யும் காலத்தில் மிகப் பெரிய மரங்கள் கீழே சாய்ந்து வீழ்ந்து கிடக்கும். அதை அனைவரும் ஆச்சரியமாக பார்ப்பார்கள். இவ்வளவு கம்பீரமாக பசுமையாக செழிப்பான மரம் பிறருக்கு நன்மை கொடுத்த மரம் எப்படி கீழே வீழ்ந்து கிடக்கிறது? என்ன காரணம் அந்த மரம் வெளிப்பார்வைக்கு மிக உயரமாக அழகாக செழிப்பாக காணப்பட்டாலும் அந்தரங்கமாக காணப்படும் வேர் ஆழமாக போக முடியவில்லை. இல்லையெனில் வேர்களை பூச்சுகள் அரித்து தின்று இருக்கக்கூடும் ஒருவேளை மரத்தின் தொடர்பிலிருந்து வேர் விட்டு போய் இருக்கக்கூடும். ஆகவே தான் தேவன் முதலாவது யாக்கோபு “வேர் பற்றி” என்று அழுத்தமாக கூறுகிறார்.

பிரியமானவர்களே நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்தில், குடும்ப வாழ்க்கையில் ஊழியப்பாதையில் நாம் கர்த்தருக்குள் வேர் பற்றியிருக்கிறோம். அப்படியில்லாவிட்டால் யாக்கோபைப் போல தேவனிடத்தில் நாம் அறிக்கையிட்டு ஒப்புரவாகி கிறிஸ்துவுக்குள் வேர் பற்றினவர்களாய் உறுதியாக நிலை நிற்போம். தேவ கிருபையை பற்றிக் கொண்டு அவரில் நிலைத்திருப்போம்.

**இஸ்ரவேல் பூத்து காய்த்து** என்று தேவன் இஸ்ரவேலை குறித்து சொல்லுகிறார். வேர் உறுதியாக பற்றும் பொழுது அதன் மூலமாக தண்டு கிளை இலை ஆகிய எல்லா பகுதிகளிலும் தண்ணீரும் தேவையான சத்துக்களும் கடந்து செல்லும். அதன் விளைவாக பூக்கள் மலருகிறது காய்கள் காய்க்கிறது. பழங்கள் பழுத்து குலுங்குகிறது. முதலாவதாக பூக்கள் பூக்கும் போது அது நறுமணத்தை வீசுகிறது. அந்த நறுமணம் துர்நாற்றத்தை நீக்கி மனமலர்ச்சியைத் தருகிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது ஒரு குடும்பம் கிறிஸ்துவுக்குள் கட்டப்படும் போது ஒரு சபையோ ஊழியமோ கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும் போது அது கிறிஸ்துவின் நற்கந்தமாக மாறுகிறது. நம்மை சுற்றியிருக்கும் அநேகர் கிறிஸ்துவின் அன்பையும் மனதுருக்கத்தையும் இரட்சிப்பின் நற்செய்தியையும் நம் மூலமாக பெற்றுக் கொள்கிறார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். 2 கொரி. 2:15

மேலும் காய்த்து கனிகளை கொடுக்கும்படியாக தேவன் கிருபை தருகிறார். ஏசாயா 27:2 வாசித்துப் பாருங்கள் அக்காலத்திலே நல்ல திராட்சரசத்தைத் தரும் திராட்சத்தோட்டம் உண்டாயிருக்கும் அதைக்குறித்து தேவன் இஸ்ரவேலாகிய தம்முடைய ஜனத்தை பூத்துக் குலுங்க மட்டுமல்ல நல்ல கனிகள் கொடுக்க விரும்புகிறார். தேவ ஜனங்களை தேவன் நல்ல திராட்சை ரசம் தரும் திராட்சை தோட்டம் என்று அழைக்கிறார். தேவன் சபையில் தேவன்

ஒவ்வொரு விசுவாசிகளை நல்ல ரசம் தரும் திராட்சை செடிகளாக வைத்திருக்கிறார். லூக்கா 13:6-9 வரை வாசித்துப் பாருங்கள். 3 வருடங்களாக பாதுகாத்து பராமரித்தும் ஒரு கனியையும் காணாதபடியால் வெட்டிப்போட வேண்டிய நிலைமை வருவதைக் கண்டு தோட்டக்காரன் மனம் வருந்தினான் இன்றைக்கும் நம் வாழ்வில் ஊழியத்தில் தேவன் கிருபையாக நன்மைகளை தந்துள்ளார். கனிகளை தேடிவரும் திராட்சை தோட்டக்காரர் மனம் மகிழும்படியாக நாம் கனிகளை கொடுக்க வேண்டும். இயேசு சொல்கிறார். யோவான் 15:16 நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்.

**<u>இஸ்ரவேலின் பலனினால் ஆசீர்வாதத்தினால்,</u>** உலகம் நிரப்பப்படும் என்று தேவன் திருவுளம் பற்றுகிறார். தேவன் பாவம், சாபங்கள் நிறைந்த உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக ஆபிரகாமை தெரிந்து, அழைத்து ஆசீர்வதித்தார். ஆபிரகாமின் குடும்பத்தை மட்டும் ஆசீர்வதிப்பது தேவனுடைய சித்தமல்ல. ஆகவே தேவன் ஆபிரகாமை அழைத்தபோது பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். ஆதி.12:3ல் அழைத்த நோக்கத்தை வெளிப்படுத்தினார்.

ஆபிரகாமின் ஆசீர்வாதம் இன்று நமக்கு கிறிஸ்து இயேசுவின் மூலமாக சபையில் நமக்கு தேவன் தந்துள்ளார். நாமும், சபையும் தேவனால் நாட்டப்பட்ட திராட்சை செடிகளாக கனிகளைதந்து உலகத்தில் சகல ஜாதிகள், பாஷைக்காரர், கோத்திரத்தார் கிறிஸ்துவின் சுவிஷேசத்தின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள அர்ப்பணிப்போம். நம் தனிப்பட்ட வாழ்க்கை மூலமாக எத்தனை ஆத்துமாக்கள் பலன் பெற்றார்கள். நம்முடைய சபை மூலமாக எந்தெந்த பிராந்தியங்கள் அறுவடையின் பலனை பெற்றது. நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கிறீர்கள் என்று இயேசு சொன்னார். சாரமற்று வாழும் சமுதாயத்திற்கு, ஜனங்களுக்கு நம் வாழ்க்கை உப்பாக இருக்கிறதா? இருளில் வாழும் ஜனங்கள் நமக்குள் வாழும் இயேசு கிறிஸ்துவின் ஒளியை கண்டு கிறிஸ்துவண்டை நடத்தப்பட்டார்களா? நம் தலைமுறையில் நாம் எத்தனை கிராமங்களுக்கு, ஊழியங்களுக்கு கிறிஸ்துவின் பலனை தரும் திராட்சை தோட்டமாக விளங்குகிறோம்? நம்மை அர்ப்பணிக்கும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பது மட்டுமல்ல உலகத்தை பலனால் நிரப்புவார்.

அதற்காக தேவன் என்ன செய்கிறார். ஏசாயா.27:3 வாசித்துப்பாருங்கள். கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப் பாய்ச்சி, ஒருவரும் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன்.

தேவன் நம் குடும்பத்திற்கும், நம் சபைக்கும், ஊழியங்களுக்கும் விசாரிக்கிற தேவனாக இருக்கிறார். தேவைகளை சந்திக்கிறவராக இருக்கிறார், பாதுகாக்கிறவராக இருக்கிறார். மத்.28:20ல் நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

என்று வாக்குரைத்த இயேசு கிறிஸ்து தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!.ஆமென்

25 வது ஆண்டில்

ஷாலோம் ஊழிய

# வெள்ளிவிழா ஆண்டு

# சிறப்பு பணிகளும் திட்டங்களும்




தேவ கிருபையால் இந்த 25ம் வெள்ளிவிழா ஆண்டில் அனைத்து 600 பீல் சுதேச ஊழியர்கள் ஆளுக்கொரு புதிய சுதேச ஊழியர்களை எழுப்பவும்; ஒரு புதிய சபையை உருவாக்கவும்; ஒவ்வொரு சபையில் உள்ள விசுவாசி குடும்பங்கள் குறைந்தது 4 குடும்பங்களை இயேசுவண்டை வழி நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட எங்களுடன் அர்ப்பணித்து உள்ளார்கள். ஆகவே 25ம் வெள்ளி விழா ஆண்டு முடிவடையும் போது 2016 இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள்; 1000 கிராம சபைகள் மற்றும் ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை தேவ நாமம் மகிமைப்பட பெற்றுக் கொள்வோம் என விசுவாசிக்கிறோம். ஆகவே இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக, சிறப்புத் திட்டங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

## வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணி திட்டங்கள்

ஷாலோம் பவன், தாகோத் – குஜராத். **(Shalom Bhavan, Dahod - Gujarat)**

தேவ கிருபையால் உருவாக்கப்பட்ட 25 வருட பணிகளை நிர்மானிக்கவும், செயல்படுத்தவும் குஜராத் தாகோத்தில் பணித்தள அலுவலகம் உள்ளது. இந்தக் கட்டிடம் சுமார் 3600 சதுர அடி நிலத்தில் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். இதை உடைத்து விட்டு, கீழ்க்காணும் அனைத்து துறைகளும் (Departments) ஒருங்கிணைந்து செயல்பட ஷாலோம் பவன் கட்டிடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.




ஷாலோம் பவன் மாதிரிப்படம்

- 3 மாநில திருச்சபைகளின் ஒருங்கிணைப்புப் பணி (Shalom Diocese / Synod Network)
- சபை வளர்ச்சிக்கான அனைத்துப் பயிற்சிகளின் திட்ட மையம் (Training Unit)
- ஊழியர் பயிற்சி, வேதாகமப் பயிற்சி, ஓய்வுநாள் பள்ளி மற்றும் VBS பயிற்சிகள்.
- நிதித்துறை வளர்ச்சி. (Finance Department Audio / Video Studio & Recording Centre.
- தகவல் தொடர்புத் துறை. (Communication – மாத பத்திரிகை, மாத அறிக்கை, ஆலய அறிக்கை, சுதேச ஊழியர் அறிக்கை & மாணவர்கள் அறிக்கை)
- பீல் மக்களுக்காக, தேசத்திற்காக 24 மணி நேரம் ஜெபிக்க ஷாலோம் ஜெப மையம்.
- Conference Hall – குறைந்தது 100 பேர்கள் கூடி ஜெபித்து திட்டமிட.
- Literature, CD/ VCD, வசன அட்டைகள் மற்றும் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை விற்கக்கூடிய இலக்கிய சேவை பிரிவு.
- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் கல்விப்பணி, மருத்துவப் பணி மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்கான அலுவலகம்.
- Sponsor Related Department.
- Car & Two Wheeler Parking வசதி.
- பேராயர் மற்றும் பேராயர் அம்மா அவர்களுக்கான அலுவலக அறைகள்.
- மேலும் இதர பணிகள்....

## ஷாலோம் பேராலயம், அந்தர்வேலியா – மத்தியப்பிரதேசம்

இந்நாட்களில் மத்தியப்பிரதேசத்தில் பீல் மக்கள் மத்தியில் சுமார் 200க்கும் அதிகமான சபைகளை வருகிறார். எழுப்புதலை கட்டளையிட்டு ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர்கள் முகாம், எழுப்புதல் முகாம்கள், ஜெபமுகாம்கள் மற்றும் பகுதிவாரிய திட்டக் கூடுகைகளை நடத்த அந்தர்வேலியா கிராமத்தில் தேவன் நமக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை தந்துள்ளார். அங்கு 120 X 40 அளவில் Hall ஒன்றும் மேலும் தேவையான அறைகள் கட்டப்பட Compound wall கட்டப்பட இரண்டு ஊழியர்கள் தங்கியிருக்க, ஜெப ஊழியங்கள் நடத்தப்பட கட்டிடங்கள் வேண்டும்.



## ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி, பிஜல்பூர் – இராஜஸ்தான்

தேவ கிருபையால் 30 பிள்ளைகளுடன் சிறிய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் பள்ளி இன்று இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை வகுப்புகள் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக நம் இராஜஸ்தான் ஊழியர்கள், மூப்பர்கள் பிள்ளைகள் 300க்கும் அதிகமாக படித்து வருகிறார்கள்.

கட்டப்பட்ட சிறிய அறைகளில் தான் பள்ளி வகுப்புகள் உள்ளது. பகல் வகுப்பறையாகவும் இரவில் தங்கும் அறையாகவும் உபயோகித்து வருகிறார்கள். இத வெள்ளிவிழா ஆண்டில் பள்ளிக்கூடத்துக்கு 10 அறைகள் மற்றும் 100 பெண் பிள்ளைகளுக்கான விடுதி அறைகள் கட்டப்பட வேண்டும்.



ஷாலோம் மிஷன் பள்ளி மாதிரிப்படம்,
பிஜல்பூர், இராஜஸ்தான்.

## மேற்கண்ட 3 வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற ரூ. 300 இலட்சங்கள் தேவைப்படுகிறது

- ❑ **ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் (அல்லது)**
- ❑ ரூ. 50 ஆயிரம் (அல்லது) ரூ. 20 ஆயிரம் (அல்லது) ரூ. 10 ஆயிரம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்கள் (அல்லது)
- ❑ தங்களால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்களை குடும்பமாக, குழுவாக, ஊழியங்களாக, சபைகளாக தேவன் எழுப்பும்படியாக ஜெபியுங்கள்.

மேலும் மாபெரும் வெள்ளிவிழா திட்டத்திற்கென உங்களால் முடிந்த நிதி உதவியை ஜெபித்து Sharing Love Mission என்ற பெயரில் DD, Cheque or Net transferல் "ஷாலோம் வெள்ளிவிழா திட்டத்திற்கான நிதி உதவி" என குறிப்பிட்டு அனுப்பவும். ஜெபித்து கொடுக்கக்கூடிய புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து வெள்ளிவிழாத் திட்டங்களை நிறைவேற்ற முன் வாருங்கள்.

**"....எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்லவேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்."** நெகே. 2:18

# தமிழகத்தில் நடைபெற்ற முன்னேற்றப் பணி ஊழியங்கள்

**கொங்கந்தான் பாறை, திருநெல்வேலி - 07.08.2016**

தேவனுடைய கிருபையினால், பரி. அந்திரேயா சி.எஸ்.ஐ. ஆலயத்தில் துதி ஆராதனை நடத்த கர்த்தர் கிருபை செய்தார். இந்த துதி ஆராதனையையும், ஷாலோம் ஊழியத்தை குறித்து சகோ. டேவிட் அவர்களும், சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்கள் பாடலுடன் செய்தியையும் கொடுத்தார்கள். ஆராதனை ஆசீர்வாதமாக அமைந்தது இந்த வாய்ப்பினை அளித்த சபையின் உபதேசியார் ஆரோன் செல்வின் அவர்களுக்கும், போதகர் மற்றும் சபை மூப்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**எழுப்புதல் ஜெபமையம், ஆலங்குளம் 13.08.2016**

கர்த்தருடைய பெரிதான கிருபையால், உபவாசஜெபத்தை நடத்தும்படியாக கர்த்தர் கிருபை பாராட்டினார் ஷாலோம் ஊழிய சகோதரிகள் லதா, கீதா, அருள்ஜெபா ஆகியோர் உபவாச ஜெபத்தை நடத்தி ஷாலோம் ஊழியத்தை குறித்து பகிர்ந்துகொண்டார்கள். இதற்கு வாய்ப்பளித்த சகோதரி ராஜம்மாள் அவர்களுக்கு எங்களது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**போல்நாயக்கன் பேட்டை சி.எஸ்.ஐ. ஆலயம், தூத்துக்குடி 13.8.2016**

தேவனுடைய பெரிதான கிருபையால், 13.8.2016 அன்று போக்குவரத்து கழக உபவாச கூடுகை நடைபெற்றது. இதில் சகோ.சாம் குணசீலன் அவர்கள் ஷாலோம் ஊழியத்தை பகிர்ந்துகொண்டு உபவாச ஜெபத்தை நடத்தினார்கள் சகோ. ஜாண்சன் ஜெபராஜ் அவர்களும் கலந்துகொண்டார்கள். இதற்கு வாய்ப்பளித்த போக்குவரத்து கழக சகோதரர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**பிளிவர் சர்ச், கோயம்புத்தூர், 15.08.2016**

தேவனுடைய பெரிதான கிருபையால், சர்ச் ஆப் பிளிவர், கோயம்புத்தூரில் 15.8.2016 அன்று சிறப்பு ஆராதனையில் சகோ. வினோத் அவர்கள் ஷாலோம் ஊழியத்தை குறித்து பகிர்ந்துகொண்டு செய்தி அளித்தார்கள். இதற்கு வாய்ப்பளித்த சபை போதகர் மற்றும் மூப்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**மேலப்பாளையம் - 28.08.2016**

தேவனுடைய பெரிதான கிருபையால், மேலப்பாளையம் கிறிஸ்து சி.எஸ்.ஐ. ஆலயத்தில் ஆராதனை நடத்தும்படியாக கர்த்தர் கிருபைசெய்தார். ஷாலோம் ஊழியத்தில் இருந்து சகோ. டேவிட் அவர்கள் ஷாலோம் ஊழியத்தை குறித்து பகிர்ந்துகொண்டு செய்தியளித்தார்கள், சகோதரி லதா அவர்களும் கலந்துகொண்டார்கள் இதற்கு வாய்ப்பளித்த போதகர் கிப்ஸன் அவர்களுக்கும் சபை உபதேசியார், மூப்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

# குஜராத் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

Pr.அனில் புரியா அந்தர்வேலியா

சங்கீதா என்ற சகோதரி வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் பல நாட்களாக கஷ்டப்பட்டார். மு விசுவாசத்தோடு இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

கடுவி என்ற சகோதரி 3 மாதமாக தலைவலியினால் வேதனைப்பட்டார். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகம்பெற்றார்.

Pr. குமன் டாமோர் கரம்பா

சம்பா என்ற சகோதரி ஒரு மாதமாக சரீர பெலவீனத்தால் பாதிக்கப்பட்டார். சபைக்கு சென்று எண்ணெய்பூசி ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

Pr. அனில் கனவா ஹிரோலா

ஹீனா என்ற சகோதரி காய்ச்சல் மற்றும் கால் வலியினால் மிகவும் வேதனைப்பட்டார். சபைக்கு சென்று கண்ணீரோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

மீனா என்ற சகோதரி 3 வருடமாக சரீர பெலவீனத்தால் பாதிக்கப்பட்டார். இயேசுவின் நாமத்தில் பாரத்தோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

Pr. தால்சிங் சங்காடா ரூண்டி

ஜம்பு என்ற சகோதரி கால் வலியினால் நடக்க டியாமல் கஷ்டப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

நிருபேன் என்ற சகோதரி அதிக உதிரப்போக்கினால் பல மாதமாக வேதனைப்பட்டார்கள். பல மருத்துவம் செய்தும் ஆடு,கோழிகளை வெட்டி பலியிட்டும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் சபைக்கு சென்று இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புத விடுதலைப் பெற்றார்.

Pr. ரமேஷ் மச்சார் வாட்லி

மால்ஜிபாய் என்ற சகோதரன் ஒரு வருடமாக கை மற்றும் கால் பக்கவாத வியாதியினால் வேதனைப்பட்டார். பலவித மருத்தும் செய்தும் எந்த வித பலனுமில்லை. இந்நிலையில் இயேசுவை விசுவாசித்து கண்ணீரோடு ஜெபித்தபோது இந்த வியாதியில் இருந்து கர்த்தர் பரிபூரண விடுதலையை கட்டளையிட்டார்.

பாபுபாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் அலைகழிக்கப்பட்டிருந்தார். ஆடு, கோழிகளை பலி செலுத்தியும் மந்திரவாதிகளை நாடியும் விடுதலை கிடைக்கவில்லை. இந்நிலையில் இவரது பெற்றோர்கள் ஊழியரிடம் சொல்லி ஜெபித்தார்கள். கர்த்தர் கிருபையாய் விடுதலையை கொடுத்தார்.

## மத்தியப்பிரதேசம் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

Pr.**கலியா தேவ்தா** தேதாம்

ஜொக்காபேன் என்ற சகோதரி கை மற்றும் கால்,இடுப்பு வலியினால் மிகவும் கஷ்டப்பட்டார். சபைக்கு சென்று கண்ணீரோடு மன்றாடினபோது சுகம் பெற்றார்.

மஹிமாபேன் என்ற சகோதரி மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டார். பல வைத்தியம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இயேசுவின் நாமத்தில் பாரத்தோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

Pr.**மால்சிங் மெய்டா** பாண்டாகபார்

கெதிபேன் என்ற சகோதரி 3 வருடமடாக அசுத்த ஆவியினால் அலைகழிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து சென்று பாரத்தோடு மன்றாடினபோது விடுதலைப் பெற்றார்.

சுரேக்காபேன் என்ற சகோதரி டைபாய்டு காய்ச்சலினால் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

Pr.**கேகு வாகுனியா** ஹத்தியாதாலை

ராம்சிங் என்ற சகோதரன் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தார். இயேசுவை நோக்கி மன்றாடி ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

ஹம்ளிபேன் என்ற சகோதரி இடுப்பில் உள்ள எலும்பு விலகி நடக்க டியாமல் கஷ்டப்பட்டார். ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் எந்த வித பலனுமில்லை. இந்நிலையில் ஊழியருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபித்தபோது நடக்க ஆரம்பித்தார்.தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

Pr.**சோம்லா புரியா** ரூபாகேடா

பீனுபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து சென்று பாரத்தோடு ஜெபித்தபோது அற்புத விடுதலைப் பெற்றார்.

Pr.**பகதூர்சிங் புரியா** ஜாராதாபர்

பிரியா என்ற சகோதரி காய்ச்சல் மற்றும் கை, கால் வலியினால் மிகவும் வேதனைப்பட்டார். மந்திரவாதியை தேடி சென்று ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் பலனில்லை. இயேசுவின் நாமத்தில் எண்ணெய்பூசி ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

Pr.**பால்சிங் புரியா** பாமன் சேமலியா

மக்ளிபாய் என்ற சகோதரன் கை மற்றும் கால் வலியினால் பாதிக்கப்பட்டார். இயேசுவின் நாமத்தில் மன்றாடி ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

Pr.**பகதூர்சிங் டாமோர்** பியாதாபர்

அர்விந்த என்ற சகோதரன் 8 நாட்களாக காய்ச்சலினால் கஷ்டப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

சம்சுபேன் என்ற சகோதரி வயிறு வலி மற்றும் வயிற்றுப்போக்கினால் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து கண்ணீரோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

# இராஜஸ்தான் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

Pr.**நார்ஜி டின்டோர்** காட்டா

ஹக்ரிபேன் என்ற சகோதரி டி.பி வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இறுதியில் சபை ஆராதனையில் வாரந்தோறும் கலந்து கொண்டு ஜெபிக்க ஜெபிக்க தேவன் அற்புத சுகத்தை தந்தார்.

பர்மிளாபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் அலைகழிக்கப்பட்டிருந்தார். இவரை சபைக்கு அழைத்து சென்று ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

Pr. **சுரேஷ் பாரியா** பாவ்காகூட்டா

சோம்ளிபேன் என்ற சகோதரி மூட்டு வலியினால் மிகவும் வேதனைப்பட்டார். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

பாபுபாய் என்ற சகோதரன் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வகையில் யற்சி செய்தும் எந்தவித சுகம் கிடைக்கவில்லை. இறுதியில் சபைக்கு சென்று இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புத சுகம் கிடைத்தது.

Pr.**பாதா கட்டாரா** சுடாதா

லால்சிங்பாய் என்ற சகோதரன் 3 வருடமாக அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு சாலைகளில் உடை இல்லாமல் அலைந்து திரிந்தார். இவரது பெற்றோர்கள் மந்திரம்,செய்வினை செய்தும் ஒரு பலனும் இல்லை. இறுதியில் இயேசுவை குறித்து கேள்விப்பட்டு ஷாலோம் சபைக்கு சென்று கண்ணீரோடு மன்றாடினபோது விடுதலைப் பெற்றார்.

Pr.**மக்கன்லால் சர்போட்டா** சோபாவானி

மாஹீலால் என்ற சகோதரிக்கு அசுத்த ஆவி போராட்டம் இருந்ததால் வயிற்றில் பிரச்சனை இருந்தது. பல வகை மருத்துவம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் விசுவாசி ஒருவர் மூலமாக சபைக்கு மாஹீலால் சகோதரியை அழைத்து வந்து ஜெபித்தபோது போராட்டத்தில் இருந்து விடுதலைக் கிடைத்தது.

Pr.**வால்சிங் காடியார்** வாகாசை

சேலாபேன் என்ற சகோதரி சரீர பெலவீனத்தார் கண் பார்வை இல்லாதவராய் வேதனைப்பட்டார். பல வைத்தியம் செய்து மந்திரம் பார்த்தும் பலனில்லை. விசுவாசி ஒருவர் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

Pr.**சங்கர்லால் கட்டாரா** புல்புரி

காளிபேன் என்ற சகோதரி 15 மாதமாக வியாதிப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் எந்த வித பயனுமில்லை. இயேசுவை விசுவாசித்து சபைக்கு சென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

செஜல் என்ற சகோதரி காய்ச்சலினால் மிகவும் வேதனைப்பட்டார். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்





**கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று – அப். 13:49.**

கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்தும் சாராயத்தைக் காய்ச்சி குடித்தும் கொண்டிருந்த பீல் மக்கள். மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.

கடந்த 24 ஆண்டுகளில் 580 பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 660 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு கிராம விசுவாசிகள் எங்களிடம் இந்த கறுப்புக் கலர் புத்தகம் என்னவென்று ஆவலாய் கேட்பார்கள். மேலும் எங்களுக்கு ஒன்று தாருங்கள் என கேட்டு வேதாகமத்தை வாங்கி பயபக்தியுடன் அரவணைத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தைக் கொடுக்காமல் குறைந்த விலையாக ரூ. 50/-க்குக் கொடுத்து வருகிறோம்.

கடந்த ஆண்டு 6,000 க்கும் மேலானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அந்த விசுவாசக் குடும்பத்தார் ஆவலுடன் வேதப்புத்தகத்தைக் கேட்கவே அவர்களுக்கு வேதப்புத்தகம் வழங்கப்பட அநேகச் சபைகள் மற்றும் தேவப்பிள்ளைகளிடம் அறிவிப்பு கொடுத்தோம். கடந்த வருடம் தேவக்கிருபையினால் சுமார் 4,000 வேதப்புத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த விலையில் வழங்க தேவன் கிருபைத் தந்தார்.



இவ்வருடம் 25,000 வேதப்புத்தகங்கள் குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதப் புத்தகத்திற்கு ரூ. 150/- வீதம் 25,000 வேதப்புத்தகங்களுக்கு நிதி உதவி செய்ய ஆதரவாளர்கள் தேவை. கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# சென்னையில் ஷாலோம் ஊழியத்தின் 25ம் ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக் கூடுகை

கடந்த ஜூலை மாதம் 26ம் தேதி நம்முடைய ஷாலோம் ஊழியத்தின் 25வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக்கூடுகை சென்னை வேப்பேரியில் நடத்தப்பட்டது. தேவனுடைய பெரிதான கிருபையினாலும், ஆசீர்வாதத்தினாலும் 25 ஆண்டுகள் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியம் வளர்ந்து பெருகி வருகிறது. இரட்சிக்கப்பட்டவர்கள் அனுதினமும் ஷாலோம் சபைகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். 600 சுதேச ஊழியர்கள் 700 கிராம சபைகள் 25,000 விசுவாச குடும்பங்களை தேவன் தந்துள்ளார். எல்லா மகிமையும் தேவனுக்கே.

இவை எல்லாவற்றிற்கும் தேவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் கடந்த ஜூலை மாதம் 26ம் தேதி சென்னை வேப்பேரியில் பாலர் கல்வி நிலைய மண்டபத்தில் வைத்து ஸ்தோத்திரக் கூடுகை நடைபெற்றது. நம்முடைய ஷாலோம் ஊழியத்தை மனதார நேசிக்கும் சகோதரர் பால் தினகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந் தார்கள். மேலும் 10க்கும் அதிகமான பேராயர், போதகர், சுவிசேஷகர்கள், மற்றும் ஷாலோம் ஆதரவாளர்கள் வந்து கூட்டத்தை சிறப்பித்து தந்தார்கள். Rt.Rev.Dr. C.E. Raj Kishore அவர்கள் ஜெபம் செய்ய நிகழ்ச்சிகள் சிறப்பாக ஆரம்பமானது.சகோ. ஆல்பர்ட் சாலமோன் அவர்கள் பாடல் வேளையையும், ஆராதனை நேரத்தையும் மிகச் சிறப்பாக நடத்தி தந்தார்கள்.

பாஸ்டர் ஞானசேகர் அவர்கள்நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள்.பீல் ஆதிவாசி மக்களின் கலாச்சார நடனம் நடைபெற்ற பின் சுதேச ஊழியர்கள் தங்களின் சாட்சிகளை கூற சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். சகோ.சாம் குணசீலன் மற்றும் சகோ. டைட்டஸ் இருவரும் மேடையில் ஒளிபரப்பிய பணித்தள ஊழிய வீடியோ காட்சிகள், சகோ. மோகன் சி.லாசரஸ் அவர்கள் நம்முடைய ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொண்ட வீடியோ காட்சிகள், பணித்தள சாட்சிகளுக்கு உயிரூட்டுவதாக அமைந்தன.

பேராயர் தேவதாஸ் அவர்கள் தேவன் தந்த அழைப்பையும், தரிசனத்தையும் பற்றி சுருக்கமாக எடுத்துரைத்தார்கள். சகோ. பால் தினகரன் அவர்கள் ஷாலோம் ஊழியத் தைக் குறித்தும், தேவனுடைய செய்தியையும் வல்லமையாக பகிர்ந்துக் கொண்டார்கள். சிறப்பாக இனிவரும் நாட்களில் ஷாலோம் ஊழியம் மற்றும் ஊழியர்களுக்கும், அதைத் தாங்கும்,ஜெபிக்கும் மக்களுக்கும் தேவன் கொடுத்த தீர்க்கதரிசன வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். கூடியிருந்த அனைவரின் உள்ளத்திலும், ஷாலோம் ஊழியத்தின் மூலம் சந்திக்கப்படும் பீல் மக்கள் மீதும் ஆத்துமபாரம் கொள்ள தேவ ஆவியானவரால் உந்தப்பட்டார்கள்.

Rt.Rev. Dr. John Sathiya Kumar, Bishop Dhayanandhan, Bishop S.M. Jeyakumar, Rt.Rev.Dr. P.H.Gladstone அனைவரும் இணைந்து டாக்டர் பால் தினகரன் அவர்களால் பிஷப் தேவதாஸ் அவர்களின் குடும்பத்திற்கும், ஷாலோம் ஊழியத்திற்கும் சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. சகோ. சுதந்திரசிங் ஷாலோம் ஊழியத்தின் 25ம் ஆண்டு திட்டங்க ளையும், தேவைகளையும் குறித்து பகிர்ந்துக் கொண்டார்கள். ஷாலோம் ஊழியத்தை தாங்க முன்வந்தவர்களுக்காக நன்றி தெரிவித்து இறுதி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

குறுகிய நாட்கள் இடைவெளியில் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டாலும், தேவன் மிக நேர்த்தியாக நடத்திக் கொடுத்தார். இந்த கூடுகைக்காக ஜெபித்தவர்கள், தன்னார்வமாக செயல்பட்டவர்கள், இதற்காக உழைத்த ஷாலோம் செயற்குழு உறுப்பினர் கள், ஷாலோம் முழுநேர ஊழியர்கள், பிரதிநிதிகள், தியாகத்தோடு தங்கள் பங்கினைக் கொடுத்த ஆதரவாளர்கள் அனைவருக்கும் குறிப்பாக பால் தினகரன், இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காக நன்றி தெரிவித்து தேவனைத் துதிக்கிறோம். தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். சென்னை முன்னேற்ற பணி ஊழியர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள். 25ம் ஆண்டு திட்டங்களுக்கு வாக்குக் கொடுத்த அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். 7000 கிராமங்களில் வசிக்கும் 1கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்களை இரட்சிக்கும் இந்த உன்னத பணியில் தேவன் முன்குறித்த இவர்களை தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக!

"**கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களைச் செய்தார் இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்**." சங்.126:3

# ஷாலோம் ஜெப மையம்

தேவனுடைய பெரிதான கிருபையால் நமது ஷாலோம் ஜெப மையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை 12 மணி நேரம் தொடர் ஜெப ஊழியம் நடைபெற்று வருகிறது. இந்த 12 மணி நேரத்தை 4 பிரிவுகளாகப் பிரித்து 12 பேர் முழு நேரமாக இணைந்து ஜெபித்து வருகிறார்கள். மட்டுமல்லாமல் தினமும் 2 ஊழியர் குடும்பங்கள் மற்றும் 2 சபையைச் சேர்ந்த மூப்பர்களும் குடும்பமாக இணைந்து ஜெபிக்கிறார்கள். மேலும் தொலைபேசியின் வாயிலாக 24 மணி நேரமும் ஜெப ஊழியம் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் அநேக ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் ஜெப உதவி பெற்று வருகிறார்கள். ஜெப மையத்தின் ஒருங்கிணைப்பாளரான சகோ. யாக்குப் பாபோர் மற்றும் நமது ஜெப வீரர்கள் தொலைபேசியில் ஜெப உதவிக்காக அழைக்கும் ஒவ்வொருவருக்காகவும் தேவனிடத்தில் பாரத்துடன் ஜெபிக்கிறார்கள். இந்த ஜெப ஊழியத்தின் மூலம் தேவன் அநேக அற்புதங்களைச் செய்து வருகிறார். தேவனுக்கே மகிமை.

ஷாலோம் ஜெப மையத்தில் நடைபெறும் ஜெபத்தின் மூலம் நடைபெற்ற அற்புத சாட்சிகளில் சில :

பெயர் சுபாஷ் கராசியா கிராமம் குல்தா விர்ஜி மாநிலம் இராஜஸ்தான்

இவர் அடிக்கடி இரத்த வாந்தி எடுப்பார். ஷாலோம் ஜெப மையத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபித்ததில் தேவன் சுகத்தைக் கொடுத்தார்.

பெயர் பத்தியா பாய் கிராமம் ரளியாத்தி மாநிலம் குஜராத்

இவருடைய குடும்பத்தில் அடிக்கடி சண்டை வரும். அதினிமித்தம் கணவன் மனைவி பிரிந்திருந்தனர். பத்திய பாய் அவர்கள் மிகவும் சோர்ந்து போன நிலையில் ஷாலோம் ஜெப மையத்தைத் தொடர்பு கொண்டு ஜெபித்ததில் தேவன் பிரிந்து போன குடும்பத்தை ஒன்று சேர்த்தார்.

பெயர் சோம்லி பேன் கிராமம் சீராமகுடி மாநிலம் இராஜஸ்தான்

இந்த சகோதரியை பாம்பு கடித்து விட்டது. உடனே ஷாலோம் ஜெப மையத்தைத் தொடர்பு கொண்டு ஜெபித்ததில் தேவன் சுகத்தைக் கொடுத்தார். பாம்பின் விஷத்தை தேவன் முறித்து போட்டார்.

பெயர் பாங்லி பேன் கிராமம் கேடி-2 மாநிலம் மத்தியப்பிரதேசம்

இவர் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு இருந்தார். ஷாலோம் ஜெப மையத்தைத் தொடர்பு கொண்டு ஜெபித்ததில் தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையைக் கொடுத்தார்.



பொறுப்பாளர் & ஜெப வீரர்கள்



கூடி ஜெபிக்கும் ஜெப வீரர்கள்

# பீஸ் தரிசன தலைவர்கள் கூடுகை

## மேம்தாபாத், குஜராத், ஆகஸ்ட் 10,11,12

















# ஷாலோம் சுதேச ஊழியர் சாட்சி



என்னுடைய பெயர் ஹிம்ராஜ் பாபேரியா. நான் மத்தியப்பிர தேசம் ஜாபுவா மாவட்டத்தில் காளாவுட் என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசுவை அறியாததற்கு முன்பு பல பாவங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்து வந் தேன். இந்த நிலமையில் என்னுடைய அம்மா வியாதிப்பட்டு மரித்துப் போகும் நிலையில் இருந்தார்கள். எல்லாவித மந்திரமும், மருத்துவமும் பார்த்தும் எந்தப்பலனுமில்லை. இந்தச் சமயத்தில் வீடு சந்திக்க வந்த ஷாலோம் ஊழியர் ஒருவர் எங்கள் வீட் டிற்கு வந்து இயேசுவைப் பற்றிக் கூறி எங்களுக்காக ஜெபித்தார். எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. என் தாயாருக்கு பூரண விடுதலை கிடைத்தது. வியா தியிலிருந்து அற்புத சுகம் கிடைத்தது. உடனே நாங்கள் அந்த இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டோம். தற்போது என் தேவனுக்காக என் சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.



என்னுடைய பெயர் வெல்ஜி கராசியா. நான் இராஜஸ் தான் பான்ஸ்வாடா மாவட்டத்தில் குசல்கட் தாலுகாவில் ஜீரா கோட் என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயே சுவை அறியாததற்கு முன்பு குடும்பத்தில் யாருக்காகிலும் வியாதி வந்தால் உடனே மந்திரவாதியிடம் தான் செல் வோம். இந்தச் சூழ்நிலையில் நான் வியாதியினால் பாதிக்கப் பட்டு பிசாசின் பிடியில் சிக்கி சமாதானம் அற்றவனாக இருந் தேன். இந்த சமயம் பக்கத்து கிராமத்தில் இயேசு கூட்டம் நடைபெறுவதைக் குறித்து கேள்விப்பட்டு அங்கு சென்றேன். அங்கு ஊழியர் இயேசுவைப் பற்றிக்கூறி பாரத்தோடு எனக்காக ஜெபித்தார். இயேசு தான் உண்மையான தெய்வம் என்று அறிக்கை செய்து என்னுடைய பாவங்களை அறிக்கை செய்தேன் எனக்கு பூரண விடுதலைக் கிடைத்தது. நான் இயேசுவை ஏற்றுக் கொண்டு என்னுடைய சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து வருகி றேன். எங்கள் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**இந்த சுதேச ஊழியரை தாங்குவோர்**
**VOICE OF HOREB CHURCH, KARUNYA NAGAR, COIMBATORE**

சகோ.ஹிம்ராஜ் பாபேரியா, சகோ.வெல்ஜி காராசியா இவர்கள் 23.07.2016 அன்று கோயம்புத்தூர் VOICE OF HOREB ஆலயத்தில் செய்தியும், சாட்சியும் பகிர்ந்து கொண்டார்கள்





**மாதந்தோறும் ரூ.2500/ கொடுத்து சுதேச ஊழியரை தாங்க முன்வரலாம்**

# Thanks Giving Ceremony for 25 Years Shalom Ministry, Chennai (26.07.2016)












# வாலிபர் முகாம்-2016










கர்த்தருடைய பெரிதான கிருபையால் நமது ஷாலோம் சபைகளில் உள்ள வாலிபர்களுக்கென்று விசேஷ முகாம்கள் நடத்த பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி கடந்த ஆகஸ்டு மாதம் குஜராத் மற்றும் மத்தியப்பிரதேசத்திலுள்ள நமது ஷாலோம் சபையின் வாலிபஆண்கள் மற்றும்பெண்களுக்கென்று பகுதிவாரியாக கூட்டங்கள் நடத்தப்பட்டது. 14-08-2016 அன்று அந்தர்வேலியா பகுதியிலுள்ள வாலிபர்களுக்கென்றும், 18-08-2016 மற்றும் 20-08-2016 அன்று குஜராத்திலுள்ளவாலிபர்களுக்கென்றும், 21-08-2016 அன்று ஒஸ்கா பகுதியிலுள்ள வாலிபர்களுக்கென்றும், 28-08-2016 அன்று டிக்கிடி பகுதியிலுள்ள வாலிபர்களுக்கென்றும் நடத்தப்பட்டது. இக்கூட்டங்களில் சுமார் 1000 வாலிபர்களுக்கு மேலாக கலந்து கொண்டுஆசீர்வாதம் பெற்றார்கள். வாலிபர்கள் தங்கள் வாலிப வயதில் இயேசுவுக்காக எழும்பி பிரகாசிக்க வேண்டும் என்றநோக்கத்தோடு எழும்பி பிரகாசி என்றதலைப்பின் கீழ் ஜெபத் துடன் இந்த கூட்டங்கள் நடத்தப்பட்டது. பாடல் வேளையில் அனைவரும் உற்சாகமாக நடனமாடிதேவனைத் துதித் தார்கள். மேலும் ஆராதனை வேளையில் கர்த்தருடைய பிரசன்னம் மற்றும் அபிஷேகத்தினால் அனைவரும் நிரப்பப்பட்டார்கள். தொடர்ந்து எழும்பிபிரகாசி என்றதலைப்பின் கீழ் புதியபாடலைஅனைவரும் கற்றுக் கொண்டு நன்றாக பாடிமகிழ்ந்து தேவனை மகிமைப்படுத்தினர்.அதைத் தொடர்ந்து சகோதரி.வஹிதா தேவதாஸ் அவர்கள் வேதத்திலிருந்து,

எழும்பிபிரகாசி உன் ஒளி வந்தது என்றதலைப்பின் கீழ் அப்போஸ் தலனாகிய பவுலின் வாழ்க்கையைக் குறித்துசெய்தியளித்தார்கள். பவுலை சந்தித்த இயேசு, சவுலே சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?'' என்றுகேட்டார். வாலிப வயதில் நாம் பாவம் செய்வதினிமித்தம் நாம் இயேசுவை துன்பப்படுத்துகிறோம் என்றுவிளக்கிக் கூறி, ஏசாயா-52:2-ன் படி தூசியைவிட்டு எழுந்திருஎன்றும், எழும்பு எழும்பு சீயோனே உன் வல்லமையை தரித்துக் கொள் என்றும் தேவவார்த்தையைப் பரிசுத்தஆவியின் வல்லமையோடுபகிர்ந்துகொண்டார'க ள். வசனத்தைக் கேட்டவாலிபர்கள் மனந்திரும்பி பவுலைப் போல இயேசுவுக்காய் ஏதாகிலும் சாதிக்க வேண்டு மென்றுதங்களை அர்ப்பணித் தார்கள். அதைத் தொடர்ந்து சவுல் பவுலாக மாறியதைக் குறித்துஷாலோம் பயிற்சிகுழுவினர் மூலம் குறு நாடகம் ஒன்று நிகழ்த்திக் காட்டப்பட்டது. கடைசியில் பரிசுத்தஆவியின் அபிஷேகத்திற்காக ஜெபம் சகோதரி.வஹிதாதேவதாஸ் அவர்கள் ஏறெடுத்தார்கள். அப்பொழுது அனைவரும் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார'கள். பின்பு ஜெபத்துடன் கூட்டங்கள் நிறைவுபெற்றது. கலந்து கொண்ட அனைத்துவாலிபர்களுக்கும் தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப் பட்டது. தேவனுக்கேமகிமை!









## கத்தோலிக்க நண்பர்கள் ஐக்கியம் ( சகோ. மேக்ஸ், சகோ.கஸ்பார்ராஜ்,சகோ.ரஞ்சித் பணித்தளவருகை (17,18,19 ஜூன்)


கலாச்சார வரவேற்ப்பு


பீல் ஆதிவாசி மக்களுக்கா ஜெபிக்கும் போது





ஷாலோம் ஆலயங்களுக்கு முன்பாக


கோய்க்கா ஆலயத்திற்க்கு முன்பு


பீஜல்பூர் மாணவர் விடுதி


பணித்தள அலுவலகத்திற்கு முன்பு


சகோதிரி.வஹிதா தேவதாஸ் அவர்களுடன்

# கத்தோலிக்க நண்பர்கள் ஐக்கியம் பணித்தள அறிக்கை

## சகோ. மேக்ஸ், சகோ. கஸ்பார்ராஜ், சகோ. ரஞ்சித்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் தூத்துக்குடியிலிருந்து சகோ.மேக்ஸ், சகோ. கஸ்பார்ராஜ், சகோ. ரஞ்சித் மூவரும் ஜூலை மாதம் 13ம் தேதி இரவு புறப்பட்டு குஜராத்திலுள்ள ஷாலோம் பணித்தளம் அமைந்துள்ள தாகோத் பட்டணத்திற்கு 15ம் தேதி இரவு வந்து சேர்ந்தோம்.

ஜூலை 16ம் தேதி சனிக்கிழமை காலை பணித்தள அலுவலகத்தில் நடைபெற்ற தியானத்தில் பங்கு பெற்றோம். சகோ. மேக்ஸ் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றுகிறவர்களுக்கு கர்த்தர் அவருடைய சமூகத்தில் உள்ள நிறைவான மகிழ்ச்சி, நித்திய பேரின்பத்தினால் (சங். 16:11) நிரப்புவார் என்பதை செய்தி வேளையில் பகிர்ந்து கொண்டார்கள்.

பின்பு அங்கிருந்து சகோ. சாமுவேல் அவர்களும் குஜராத்திலுள்ள வரம் கேடா, கர்படா ஆகிய பகுதிகளிலுள்ள சபைகளுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு புறமார்க்கத்தரால் இடிக்கப்பட்ட ஆலயத்தையும், ஆனாலும் அந்த பகுதி விசுவாசிகளால் அதே பகுதியில் எழுப்பப்பட்டுள்ள மற்ற ஆலயங்களையும் காண கர்த்தர் கிருபை செய்தார். அதன்பின் பட்டன்புரா என்ற இடத்திலுள்ள ஷாலோம் கிளைச் சபையில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் கலந்துக் கொள்ளவும், அங்கு சகோ. மேக்ஸ், சகோ. கஸ்பார்ராஜ் அவர்கள் தேவ செய்தியளிக்கவும், சகோ. ரஞ்சித் அவர்கள் சாட்சி பகிர்ந்துக் கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார். அங்கு விசுவாசிகளின் உற்சாகமான ஆராதனை இன்றும் எங்கள் மனக்கண்களில் சந்தோஷம் தருகிறது.

ஜூலை மாதம் 17ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மத்தியப்பிரதேசத்திலுள்ள விசால்பூர், புல்லடி, முண்டத் ஆகிய மூன்று இடங்களிலும் நடைபெற்ற ஓய்வுநாள் ஆராதனையில் பங்கு பெறவும் அங்கு சகோ. மேக்ஸ், சகோ. கஸ்பார்ராஜ தேவ செய்தியளிக்கவும், மேலும் ஆலயத்திற்கு தேவையான உபகரணங்களை வாங்கிக் கொடுக்கவும் தேவன் கிருபை செய்தார். மேலும் விசால்பூர் ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனை வேளையில் கர்த்தர் ஆறு பெண்களுக்கு பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கிடைக்கவும் கிருபை செய்தார். மேலும் அந்தர்வேலியா என்ற இடத்தில் அமையவுள்ள புதிய கட்டிடங்களுக்கான இடத்தைக் கண்டு ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார்.

ஜூலை மாதம் 18ம் தேதி திங்கட்கிழமை இராஜஸ்தானில் உள்ள ஹிரோலா, கும்புரா மற்றும் பல ஆலயங்களையும், பிஜல்பூரில் உள்ள ஷாலோம் பள்ளிக்கூடம், தங்கும் விடுதி ஆகியவற்றை காணவும் கர்த்தர் எங்களுக்கு கிருபை செய்தார். இந்த மூன்று நாட்களும் பீல் ஆதிவாசிகள் உள்ள பணித்தளங்களில் கர்த்தர் ஷாலோம் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் மகத்தான செய்கைகளை கண்டு வியந்தோம்.

எனவே அன்பான தேவனின் பிள்ளைகளே நீங்களும் கூட குடும்பமாகவோ, சபையாகவோ பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களை தாங்கவும், ஆலயங்களை கட்டி எழுப்பவும், பீல் மாணவர்களை தாங்கவும் முன் வாருங்கள். கர்த்தர் தாமே ஷாலோம் மிஷனெரிப் பணியையும், ஊழியத்தையும் மென்மேலும் ஆசீர்வதித்து பெருகச் செய்வாராக.

# தமிழ்நாட்டில் நடைபெற்ற சிறுவர் ஊழியம்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஷாலோம் ஊழியத்திலிருந்து சிறுவர்களை ஆதாயப்படுத்தும் பணியில் கடந்த ஆகஸ்டு மாதம் 4ம் தேதி வியாழக்கிழமை அன்று தூத்துக்குடி மாவட்டம், நயினார்புரம் என்ற இடத்தில் உள்ள T.N.D.T.A. Primary School - ல் சென்று அங்குள்ள சிறு பிள்ளைகளுக்கு ஷாலோம் ஊழியத்தில் உள்ள சகோதரிகள் சென்று பாடல்களை அபிநயத்தோடு கற்றுக் கொடுத்தும், மற்றும் கதைகள், Puppet Show, வேதத்தில் உள்ள வசனத்தை மனப்பாடமாக சொல்லி பிள்ளைகளை உற்சாகப்படுத்தும்படி கர்த்தர் கிருபை செய்தார். எங்களை அன்புடன் உபசரித்து, எங்களுக்கு இந்த வாய்ப்பு அளித்த அந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. ஸ்டீபன் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தருக்கே சகல துதியும் கனமும், மகிமையும் உண்டாவதாக.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஷாலோம் ஊழியத்திலிருந்து சிறுவர்களை ஆதாயப்படுத்தும் பணியில் ஆகஸ்டு மாதம் 12ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று தூத்துக்குடி வடக்கூர் T.N.D.T.A. Middle School - ல் சென்று அங்குள்ள சிறு பிள்ளைகளுக்கு ஷாலோம் ஊழியத்தில் உள்ள சகோதரிகள் சென்று பாடல்களை அபிநயத்தோடும், மற்றும் கதைகள், Puppet Show, வேதத்தில் உள்ள வசனத்தை மனப்பாடமாக சொல்லி பிள்ளைகளை உற்சாகப்படுத்தும்படி கர்த்தர் கிருபை செய்தார். எங்களை அன்புடன் உபசரித்து, எங்களுக்கு வாய்ப்பு அளித்த அந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. தங்கராஜன் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தருக்கே சகல துதியும் கனமும், மகிமையும் உண்டாவதாக.











உங்கள் சபையிலோ அல்லது பள்ளிகளிலோ இதுபோன்ற **சிறுவர் நிகழ்ச்சிகள்** நடத்த விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.சகோதரி. சாந்தி. செல் : 9688344522



# மிஷனெரி வாழ்க்கை வரலாறு

நட்சத்திர அம்மையார் - **எமி கார்மைக்கேல்**
இந்திய பெண் மிஷனெரி - **1867 - 1951**
பண்ணைவிளை (1887-1901) : **டோனாவூர் 1901-1951**

துன்பங்களை நன்குபுரிந்து-பாடுபடும் வாழ்விற்கு தன்னை அர்ப்பணித்தவர் எமி. பெண்களின் விடுதலைக்காக சமுதாய சீர்திருத்தத்திற்காக பாடுபட்ட பண்டித இராமாபாய் போன்று தமிழகத்தில் திகழ்ந்தவர் எமிகார்மைக்கேல் அம்மையார். பெண்கள், குழந்தைகள் காப்பகமாக அல்ல-விடுதலை நிறுவனமாக டோனாவூர் ஐக்கிய கூட்டம் செயல்பட்டது.

இங்கிலாந்திலிருந்து வந்த பெண் மிஷனெரிகளில் எமி நவீன கால மிஷனெரி இயக்கத்தின் புகழுக்குரியவர் இவர் இந்தியாவில் தொடர்ந்து ஐம்பத்து மூன்று ஆண்டுகள் பால் மணம் மாறாத பெண்குழந்தைகள் முதல் இளம் பருவத்தினர் வரையும் உள்ளவர்களுக்கு அம்மையார் செய்த தியாகப்பணி இன்று உலகெங்கும் நட்சத்திரங்களாக பிரகாசிக்கிறது.

***பிறப்பும் இளமையும் 1867***

ஏமி கார்மைக்கேல் அம்மையார் 1867ம் ஆண்டு டிசம்பர் மாதம் அயர்லாந்திலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார். இளமைப்பருவத்தில் ஏமி எல்லா வசதிகளோடு வாழ்ந்தாலும், பெற்றோர்கள் தேவ பயத்திலும், தேவ அறிவிலும் ஏமியை வளர்த்து வந்தனர். கல்வாரி சிலுவை அன்பை அதிகமாகப் போதித்து வந்தனர்.

தனது 12 வயதில் ஏமி, போர்டிங் பள்ளியில் கல்வி பயில அனுப்பப்பட்டார். அங்கு குழந்தைகளுக்காகத் தனியாக உழைக்கும் மிஷன் (The Children's Special service mission) நடத்திய கூட்டத்தில் ஏசு எந்தன் நேசரே, கண்டேன் வேத நூலிலே என்ற பாடலை மற்றவர்களோடு சேர்ந்து பாடினார். அந்த அமைதியான வேளையில், ஏமி தனது உள்ளத்தை திறந்து இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்.

***தேவனுக்காகத் தன்னை அர்ப்பணித்தார் 1892***

ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆலயம் சென்று திரும்பி, வீட்டுக்கு குடும்பத்தோட நடந்து கொண்டிருக்கும் போது, ஒரு மெல்லிய குரலைக் கேட்டார். இயேசுவைக் குறித்து அறியாத மக்களின் அழுகுரலைக் கேட்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. மீண்டும் இறுதி அழைப்பின் தொனியைக் கேட்டார். நீ போக போ - ஒரு முறை மட்டுமல்ல - மீண்டும் மீண்டும் இந்த அமைப்பு அவருக்கு வந்து கொண்டே இருந்தது. தன்னிடம் பேசுபவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என உணர்ந்து கொண்டு தன்னை அயல்நாட்டிற்கு மிஷனெரியாகச் செல்ல அர்ப்பணித்தார். திரு வில்சனும், ஏமியின் தாயாரும் அன்புடன் சம்மதித்தனர்.

***அயல்நாட்டு மிஷனெரி பயணம் 1894***

சீனாவில் இலட்சக் கணக்கில் ஆண்டவரை அறியாதவர்களாய் மக்கள் மரிக்கிறார்கள் என்ற ஹட்சன் டெய்லரின் அறைகூவலை ஏற்று, சீனா செல்ல முடிவெடுத்தார். ஆனால் உடல்நிலை ஏற்றதாய் இல்லை என மருத்துவர்கள் கூறிவிட்டனர். பின்பு 1893ல் ஜப்பான் சென்று 15 மாதங்கள் பணி செய்தார். சரீரம் பெலவீனம் அடைந்ததால், சிலோன் சென்றார்.

### *இந்தியாவுக்கு 1895*

ஜென்னா மிஷனெரி சங்கம் மூலம் 1895ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியா வந்து, பெங்களூர் ஜென்னா மிஷன் மருத்துவமனையில் பணியாற்றினார். டாக்டரோடு சேர்ந்து பிணியாளிகளை சந்தித்து சுவிசேஷத்தை அறிவித்து வந்தார்.

### *திருநெல்வேலி அழைப்பு*

கோடை மாதத்தில் மற்ற மிஷனெரிகளோடு ஏமி நீலகிரியில் தங்கியிருந்தார். இங்கு திருநெல்வேலியில் பணியாற்றிய மிஷனெரியான தாமஸ் உவாக்கரை சந்தித்தார். (உவாக்கர் 1885ம் ஆண்டிலிருந்து சி.எம்.எஸ். மூலம் திருநெல்வேலி பகுதிகளில் பணிபுரிந்து வந்தார்)

### *பண்ணைவிளையில் 1897*

உவாக்கர் ஏமியை சந்தித்த போது திருநெல்வேலி பகுதியிலுள்ள கிராமங்களில் அவரோடு இணைந்து பணியாற்றியும் பெண்கள் மத்தியில் ஊழியம் செய்யவும் அழைத்தார். அந்த தேவ அழைப்பை ஏற்று, பண்ணைவிளை கிராமத்தை மையமாக வைத்து, உவாக்கருடன் இணைந்து பணியாற்றினார். இரண்டு ஆண்டிலேயே தமிழைக் கற்றுத் தேர்ந்தார்.

### *பெண்களுக்கு விடுதலை*

இந்திய தேவதாசி பழக்கம் ஒரு இந்து சமுதாய அமைப்பு வாலிபப் பெண்கள் தேவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டனர். அவர்கள் இந்துக் கோவிலைச் சுத்தம் செய்வது, விக்கிரகங்களுக்கு காற்று வீசியது, விளக்குகள் தூக்குவது,நடனமாடுவது போன்ற வேலைகளைச் செய்து வந்தனர். நாளடைவில் பூசாரிகளும், பக்தர்களும் அனுபவிக்கும் விபசாரிகளால் மாறியது. சிறு பெண்கள் விலைக்கோ அல்லது தானமாகவோ கோவில்களுக்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்களைக் கண்டு பிடித்து, இவர்கள் மத்தியில் ஊழியம் செய்தார். இச்சிறுபெண்களை மீட்டு, அவர்கள் அவல நிலையை மாற்றினார்.

### *நட்சத்திரக் கூட்டம்*

பெண் குழந்தைகள் விலை கூறி விற்கப்படுகின்ற அவலநிலை-பத்து வயது கூட நிரம்பாத சிறுமிகள், கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு - அலறித் துடித்து சாகின்ற நிலை  கண்டு அம்மையார் அதிக மனவேதனை அடைந்தார். அவர்களை மீட்டுத் தன்வீட்டில் பராமரித்தார். அப்பெண் குழந்தைகளை மீட்க வேதனை அடைந்தார். அவர்களை மீட்டுத் தன்வீட்டில் பராமரித்தார். அப்பெண் குழந்தைகளை மீட்க நட்சத்திரக் கூட்டம் என்ற குழுவை ஏற்படுத்தி செயல்பட்டார்.

### *பெண்கள் மீட்பு*

பெண்களைக் கோவில்களுக்கு நேர்ந்து விட்டால், ஏதோ புண்ணியம் பெற்றுக் கொண்டதாக அம்மக்கள் நம்பினர். கோவில் தெய்வத்துக்கு அர்ப்பணிக்கப்பட்ட பெண், பூசாரியின் உடைமையாகி, பின்னர் விலைமாது என்னும் கொடுமைக்குத் தள்ளப்படுவார்கள்.

### *ஒரு சம்பவம்*

உயர்குடியில் பிறந்த ஏழுவயது பெண்ணொருத்தி தரகர் மூலம் விற்கப்பட்டார். அவள் தப்பி தாயிடம் சென்றாள். திரும்பவும் அக்குழந்தையைப் பறித்து, அதன் பிஞ்சுக் கரங்களில் துடிக்கத் துடிக்கச் சூடு போட்டனர் தரகர்கள். அக்குழந்தை நரகத்திலிருந்து தப்பி, பணணைவிளை வந்தபோது ஒரு கிறிஸ்தவப் பெண் அக்குழந்தையைக் கண்டு ஏமி கார்மைக்கேல் அம்மையாரிடம் அழைத்துச் சென்றாள். நெடுநாள் காணாதிருந்து கண்ட பிள்ளையைப்போல் ஆரத்தழுவி மடியிலிருத்திக் கொண்டு அன்புடன் முத்தமிட்டார் அம்மையார். குழந்தை சொன்ன செய்தியைக் கேட்ட அம்மையாரின் உள்ளம் பதைபதைத்தது. தரகர்கள் அம்மாவிடம் வந்து குழந்தையைக் கேட்க - குழந்தையோ நான் அம்மாவுடன் தான் இருப்பேன் என்றது. இப்போது அவள் அம்மாவின் குழந்தையாகி விட்டாள்.

இப்படியாகப் பல குழந்தைகளும் பெண்களும் கல்வாரி அன்பினால் இணைக்கப் பட்டனர், காப்பாற்றப்பட்டனர்.

### *தேவ சித்தத்தின்படி டோனாவூர்*

டோனாவூரின் சுற்றுப்புற கிராமங்கள் - சீதோஷ்ண நிலை அம்மாவுக்கும், நட்சத்திரக் கூட்டத்தினருக்கும், ஏற்ற இடமாக இருந்ததாலும் கனம் உவாக்கர் அவர்களும் தமது இறையியற் பணிக்கு ஏற்ற இடமாக இப்பகுதியை விரும்பியதா லும், பண்ணைவிளையின் பணிகள் டோனாவூருக்கு மாற்றப்படலாயின. (1902)

### *டோனாவூர் ஐக்கியம் 1902*

அனாதையாக விடப்பட்டு, ஆதரவற்ற குழந்தைகளுக்கு அம்மையார் ஒரு கலங்கரை விளக்கமாகவே காணப்பட்டார். குழந்தைகளை பராமிப்பதற்காக, டோனாவூர் செம்மண் பரப்பில், செடி கொடியற்ற பாதுகாப்பான இடத்தில், ஒரு சரணாலயத்தை ஏற்படுத்தினார்கள் (1902) கோவில்களுக்கு அர்ப்பணிக்கப்படும் சிறுமிகள் ஒதுக்கப்பட்டவர்கள் என எல்லாக் குழந்தைகளையும் தன் நண்பர் குழுவு டன் தேடிக் கண்டுபிடித்து, அரும்பணி செய்து, அவர்களை வளர்த்தனர். இந்த டோனாவூர் ஐக்கியம் ஒரு சிறந்த ஜெபக்குழுவாக உருவாகியது. ஊழியம் வளர்ச்சியடையவே தேவையான ஒரு ஜெப ஆலயமும்- மருத்துவமனையும் அங்கு தோன்றின (1929).

### *பணியில் பகைமை*

ஏமி அம்மையார் வதந்திகளையும், விமரிசனங்களையும் சந்திக்க வேண்டி யதாயிற்று. அவர் செய்த பணியினைத் தவறாகப் புரிந்துக் கொண்ட மக்கள், மக்களைத் தன்பால் இழுத்துக் கொள்ளவே, அவர் செய்கின்ற யுக்தி என்றனர். அவரை ஒரு சர்வாதிகாரி எனவும் திருமணத்தை எதிர்த்தார் எனவும் கூறினார். ஏமி அம்மையாரோ இந்த விமர்சனத்தைப் பொருட்படுத்தாது பணியினைத் தொடர்ந்து செய்தார்.

### *அம்மையாரின் மரணம் 1951*

அமைதி அறை (Room of Peace) என்னப்பட்ட தனது படுக்கை அறையில் இருபது ஆண்டுகள் படுக்கையில் அனுபவித்த பாடுகளும், வேதனைகளும் இறுதியில் முடிவுக்கு வந்தன. ஏமி கார்மைக்கேல் அம்மையார் 1951ம் ஆண்டு ஜனவரி 18ம் நாள் 83 வயதில் நித்திய மகிமைக்குள்-நித்திய இளைப் பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

டோனாவூர் சுற்றுவட்டார மக்கள் இறுதி தரிசனத்திற்காக - அவரது உடல் டோனாவூர் ஆலயத்தில் பகலில் வைக்கப்பட்டது. பின்னர் டோனாவூர் ஐக்கிய ஜெப ஆலயத்தில், குழந்தைகள், பெண்கள் இறுதி அன்பு மரியாதை செலுத்தினார்கள். கடவுளுடைய தோட்டம் (God’s Garden) என்னப்பட்ட மகிமையின் இடத்தில், புனித உடல் ஒரு பலகையில் வைக்கப்பட்டு குழியில் இறக்கி மண்ணால் மூடப்பட்டது. கல்லறை கட்டாத பிரேதக்குழி இது மண்ணுக்கு மண்ணாக புழுதிக்குப் பழுதியாக ஒப்புக் கொடுக்கப்பட்ட அம்மாவைப் பின்வரும் சந்ததியார் நினைவில் கொள்ள - பறவைகள் நீராடும் ஒரு தொட்டி கல்லறை நினைவுச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளது.

தொட்டிக்கு வரும் பறவைகளின் கீதம் போன்ற அம்மா பாடிய ஒரு பாடலை அடிக்கடி நினைவு கூறுகிறார்கள்.

*சின்னஞ்சிறு சிட்டுவின் இறைவா*

*நீர் என்னையும் என்னையும் நேசிக்கிறீர்*

*அம்மாவுக்கு நினைவுச் சின்னம்* - இங்கு வளர்க்கப்பட்டு உலகெங்கும் வாழும் இக்குடும்பத்தின் பிள்ளைகளே!

# ஜெபகுறிப்புகள்......

1. ஷாலோம் ஊழியத்தின் 25வது ஆண்டு வெள்ளிவிழா ஆண்டினைக் காணச்செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்தி, மேலும் ஷாலோம் ஊழியம் வளர்ந்து பெருகி 1 கோடி பீல் ஆதிவாசி மக்களும் இரட்சிக்கப்படவும், 7000 கிராமங்கள் சந்திக்கப்படவும், 7000 ஊழியர்களைத் தேவன் எழுப்பித் தரவும், 7000 சபைகள் கட்டப்படவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

2. வெள்ளிவிழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணியான ஷாலோம் பவன்,(குஜராத்) அந்தர்வேலியாவில் ஷாலோம் பேராலயம் (மத்தியப்பிரதேசம்) மற்றும் ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி பிஜல்பூர் (இராஜஸ்தான்) இம்மாபெரும் மூன்று வெள்ளிவிழாத் திட்டங்களும் நிறைவேறவும் அதற்குத் தேவையான ரூ. 300 இலட்சங்கள் சந்திக்கப்படவும் நாம் கருத்தோடு ஜெபிப்போம்.

3. நம் பீல் சுதேச ஊழியர்களை கர்த்தர் இன்னும் அதிக வல்லமையோடு பயன்படுத்தவும், அவர்கள் மூலம் கர்த்தர் அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்யும்படியாகவும், அவர்கள் குடும்பத்தையும் பிள்ளை களையும் கண்மணிபோல பாதுகாத்துக் கொள்ளும்படியாகவும் நாம் விசுவாசத்தோடு ஜெபிப்போம்.

4. அநேக பீல் வாலிபர்களை தேவன் எழுப்பி அவர்கள் மூலமாக எல்லோரும் அதிசயிக்கும்படியான காரியங்களை தேவன் இந்த பீல் வாலிபர்கள் மூலம் செய்யும்படியாகவும், பீல் வாலிபப் பெண்கள் கர்த்தருக்காக வைராக்கியமாக எழும்பவும் நாம் ஜெபிப்போம்.

5. பீல் சிறுவர்கள் கர்த்தரே உண்மையான தேவன் என்பதை அறிந்துக் கொண்டு சிறுவர்கள் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு இயேசுவின் அன்பைக் கூறி சிறுவர்கள் மூலமாக பீல் மக்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படியாக

   சிறுவர்களை கர்த்தர் பயன்படுத்தும்படியாகவும், இவர்களுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தைக் கொடுத்து கல்வியில் சிறந்து விளங்கவும், நல்ல உயர்ந்த ஸ்தானத்திற்கு பிள்ளைகள் வரும்படியாகவும் கர்த்தரிடத்தில் ஜெபிப்போம்.

6. பீல் ஆதிவாசி பெண்கள் வல்லமையாய் எழும்பி மற்றவர்களையும் ஆதாயப்படுத்தக் கூடியவர்களாய் மாறவும், அவர்கள் கூடுகிற ஒவ்வொரு கூடுகையிலும் தேவன் அவர்களையும் பயன்படுத்தும்படியாக ஜெபிப்போம்.

7. பணித்தளத்தில் உள்ள அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் கிளை அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், முன்னேற்றப் பணியாளர்கள், ஷாலோம் பிரதிநிதிகள் அனைவருக்காகவும், அவர்களுடைய குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

8. நம் ஷாலோம் ஊழியத்தின் ஆதரவாளர்கள் அனைவருக்காகவும், இந்த ஊழியத்தை தாங்குகிறதான சபை போதகர்கள், ஊழியக்காரர்கள், தொழிலதிபர்கள், வியாபாரிகள், பணிபுரிபவர்கள் அனைவருக்காகவும் அவர்களுடைய குடும்பங்களுக்காகவும் அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் நாம் கருத்தாய் ஜெபிப்போம்.

9. ஷாலோம் ஊழியம் மேலும் வளருவதற்கும், அநேக ஆலயங்கள் கட்டிக் கொடுப்பதற்கும், அநேக ஆதரவாளர்கள் எழும்பவும், ஜெபித்து தாங்குபவர்கள் எழும்பவும் நாம் ஜெபிப்போம்.

10. நம் பேராயர் வே.தேவதாஸ் அவர்களும் சகோதரி வஹிதா அவர்களும் தேவன் கொடுத்த தரிசனத்தின்படி அவர்கள் செய்து முடிக்க தேவன் அவர்களுக்கு நல்ல சுக, பெலன், ஆரோக்கியத்தைக் கொடுக்கும் படியாகவும், ஒவ்வொரு நாளும் அவர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்களுடைய பிள்ளைகள் டைட்டஸ் - மெர்லின், Zion Kryston, அவர்களுடைய ஊழியங்களுக்காகவும், சகோ. ஷாலோம் M.A. (Media) பயின்று வரும் அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், சகோதரி ஷெக்கினா அவர்கள் தங்கள் மருத்துவ படிப்பை முடித்து பணித்தளத்திற்கு வந்திருக்கிற அவர்களுக்காகவும், தேவன் இந்த குடும்பம் முழுவதையும் பாதுகாத்து அவருடைய ஊழியத்தில் அபரிவிதமாக பயன்படுத்துமாறும் நாம் அனைவரும் சூ இணைந்து ஜெபிப்போம்.

11. அற்புத சுகமளிக்கும் கூட்டம் பணித்தளத்தில் 23.9.2016 அன்று அனைத்து ஷாலோம் சபைகளிலும் நடைபெற உள்ளது. இதில் பீல் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு தேவையோடு உள்ள மக்களுக்கு தேவன் அற்புத சுகம் கொடுக்கும்படியாக நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

ஜெப-துதி மொழி

*துதி இருக்கிற இடத்தில் கர்த்தரும் கர்த்தர் இருக்கிற இடத்தில் துதியும் இருக்கும்.*

*ஜெபம் என்பது பரம தகப்பனுடைய பொக்கிஷ சாலையை திறக்கும் திறவுகோல்*



# ஷாலோம்

## வேத வினாப் போட்டி

**34**

(2 சாமுவேல், 1 இராஜாக்கள் புத்தகங்களிலிருந்து விடை காணவும்)

1. சாலொமோன் எத்தனை நீதிமொழிகள் சொன்னான்?
2. அகிமாஸ்-க்குப் பதிலாக யாரை ராஜாவுக்கு செய்தி சொல்ல அனுப்பினான்?
3. யாருடைய ஆலோசனையை அபத்தமாக்கும்படி தாவீது கர்த்தரை வேண்டிக் கொண்டான்?
4. அதோனியா யாரை கெட்டிக்காரன் என்று சொன்னான்?
5. அப்சலோமிற்கு பின் அவன் தாய் பெற்றெடுத்த ராஜ குமாரன் யார்?
6. சாலொமோன் கர்த்தரிடத்தில் கேளாத எவைகளை பெற்றுக் கொண்டான்?
7. மரணத்திற்கு பாத்திரவான் என்று சாலொமோன் யாரைச் சொன்னான்?
8. மேவிபோசேத்திற்கு உண்டான குறைபாடு என்ன?
9. கர்த்தருடைய பெட்டி யார் வீட்டில் 3 மாதங்கள் இருந்தது?
10. யாரை அவள் சொன்னபடியே யெனாயா கொன்று போட்டான்?

### வேதவினாப் போட்டியில் பங்குபெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள்

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில் களை மட்டும் தெளிவாக எழுதினால் போதும்
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 16.09.2016

### *கடந்த ஆகஸ்ட் மாத வேதவினா போட்டி எண் 33க்கான சரியான விடைகள்*

| | |
|---|---|
| 1. நேர் - 1 சாமு. 14:51 | 6. 7 வருஷம் 6 மாதம் - 2 சாமு. 5:5 |
| 2. இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலைப் பார்த்து - 1 சாமு. 12:4 | 7. காடு - 2 சாமு. 18:8 |
| 3. கேகிலா -1 சாமு. 23:7 | 8. தாவீது சவுலைப் பார்த்து - 1 சாமு. 24:13 |
| 4. நாபால் - 1 சாமு. 25:1,3 | 9. வலது கண்ணை பிடுங்கி நிந்தையை வரப்பண்ணுவதே - 1 சாமு. 11:2 |
| 5. பெலிஸ்தனுடைய (கோலியாத்தின்) தலை - 1 சாமு. 17:57 | 10. பல்த்தியேல் - 2 சாமு. 3:15 |

**கடந்த ஆகஸ்ட் மாத வேத வினா போட் எண் 33இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்**

1. திரு. **E.S.சாமுவேல் கோபால்**, ஆறுமுகநேரி
2. திரு. **S.G.நாச்சியார் அருளாணந்தம்**, முத்தம்மாள்காலனி, தூத்துக்குடி
3. திருமதி. **பத்மினி டேவிட்**, சென்னை-73

### பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி

**SHARING LOVE MISSION**
New No.5A/323, Old. No.5/168.
Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 00.8. Tamil Nadu.
Phone : 0461 - 2375468

வாசகர்கள் தங்கள் பதில்களை
**9345675468 - என்ற மொபைல் எண்ணிற்கு**
**SMS மூலமாகவோ What Appமூலமாகவோ**
அனுப்பலாம் அல்லது
info@shalommission.in
என்ற ஈ-மெயிலும் அனுப்பலாம்.

WhatsApp

# செப்டம்பர் மாத ஷாலோம் ஜெபங்கள்

| நாள் | நேரம் | இடம் | தேவசெய்தி மற்றும் தொடர்புக்கு |
|---|---|---|---|
| 03.09.2016<br>(சனிக்கிழமை) | காலை 9.15 முதல்<br>1.00 மணி | அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகம்<br>No. 5A/323, கால்டுவெல் காலனி 3வது தெரு,<br>தூத்துக்குடி-628 008. | Prof.C.S. **கிறிஸ்டோபர்,**<br>பாளையங்கோட்டை |
| 10.09.2016<br>சனிக்கிழமை | மாலை 5.00<br>மணிக்கு | M.T.N பில்டிங்<br>(மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, மார்த்தாண்டம் | சகோ.*S.* **ஜெயகுமார்,**<br>இயேசு விடுவிக்கிறார் வாலிபர்<br>ஒருங்கிணைப்பாளர்<br>நாகர்கோவில். செல் : 9688144522 |
| 10.09.2016<br>சனிக்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | தலைமை அலுவலகம்<br>தூத்துக்குடி | சகோ. **சாம் குணசீலன்,**<br>செல் : 9345675468· |
| 12.09.2016<br>திங்கள்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | பெண்கள் கூடுகை<br>தலைமை அலுவலகம், தூத்துக்குடி | செல் : 9688744522 |
| 17.09.2016<br>சனிக்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | எபனேசர் பிளாசா, பரமா தெரு ஜங்சன்,<br>நாகர்கோவில். | செல் : 9688744522 |
| 17.09.2016<br>சனிக்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | எஸ்தர் பெண்கள் ஜெபக்குழு கூட்டம் | செல் : 9688744522 |
| 24.09.2016<br>சனிக்கிழமை | காலை 10.00 மணி<br>முதல்1.00மணிவரை | எண் 102, 2வது மெயின் ரோடு,<br>சத்யா நகர், பாடி, சென்னை | **சகோ.ஜான் ஜெயசிங்,**<br>செல்96982 44577 |

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும், இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- **தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**
- **உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**
- **காணிக்கைகளை** E.M.O. **மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு கிளை : சிதம்பரநகர் என்று அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறோம்.**
- SHARING LOVE MISSION **என்ற பெயருக்கு** D.D. **அல்லது** Cheque **எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவு தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.**
- **உங்களது வங்கிக் கணக்கிலிருந்து,** Net Transfer **மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.**
- **நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில்** Cash (or) Cheque (or) D.D. **மூலம்** Deposit **பண்ணலாம்.**
- **எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.**

---

**வங்கிக் கணக்கின் பெயர் : Sharing Love Mission**

Branch : Tuticorin. **கிளை : தூத்துக்குடி**

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK

**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில்** Cash (or) Cheque (or) D.D. **மூலமாகவோ அல்லது** Net Transfer **மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை** e-mail, Phone, SMS, Whats app **மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு :** 93456 75468

## உங்கள் ஜெப உதவிக்கு ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE** **SHARING LOVE MISSION, Bro. Sam Gunaseelan**

No. 5A/323,-3rd Street, Caldwell Colony, TUTICORIN-628008
Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh** No.102-2nd Main Road Sathya Nagar, Padi, CHENNAI - 600050,Cell : 9698244577

**NAGERCOIL BRANCH OFFICE** **Bro. Robinson. S.**

Ebenezer Plaza, Parama Street, WCC Junction,Nagercoil - 629001
Cell : 9688144522, 9698444522

**MARTHANDAM BRANCH OFFICE** **Bro. Selvadurai.G**

M.T.N. Building, North Street, Near Women's Police Station,
Marthandam, K.K. Dist. - 629165, Cell : 9487689869, 9659644500

**MADURAI BRANCH OFFICE** **Bro. Chandra Paul. S**

6/3, Nellaiappar Puram 7th Street,Tirunagar (p.o)
MADURAI-625006, Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE** **Bro. David. R**

56 A/4,-C.S.I Church South Street, (Upstairs) STC road, Perumalpuram,
Palayamkottai TIRUNELVELI-627007, Cell 9698844599

**MUMBAI BRANCH OFFICE** **Bro. Jacob. N.**

Bathani Bhavan, Room No. 11, First Floor, R. No. 2, Gate No. 6,
Malvani, Malad West, Mumbai - 400095,Cell : 09819554974

**COIMBATORE BRANCH OFFICE** **Mr.Yardli Vinodh.J**

No: 31 LakshumiGarden, Palaya Pudur, Periyanayakkan palayam,
Coimbatore -641020, Cell : 9698144522

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

**SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin,

**AXIS BANK**
Branch : Tuticorin,
**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

**Tamilnad Mercantile Bank**
**174100710400061**
(IFS Code : TMBL0000174)
**Branch : Tiruchendur Road**

# நாட்டு நடப்புச் செய்திகள்

**ஒரே மாத்திரையில் ஆஸ்துமாவுக்கு தீர்வு : பிரிட்டன் விஞ்ஞானிகள் சாதனை**

ஆஸ்துமாவால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள வயது வந்தவர்களுக்கு உதவும் வகையில் பிரிட்டனில் உள்ள விஞ்ஞானிகள் சோதனை அடிப்படையில் ஒரு மாத்திரையை கண்டுபிடித்துள்ளனர். கட்டுப்படுத்த முடியாத ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மருந்து கொடுக்கப்பட்ட பிறகு அவர்களின் அறிகுறிகள் மேம்பட்டிருப்பது உணரப்பட்டதாக லெஸ்டர் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட சிறிய சோதனை முயற்சியில் தெரிய வந்துள்ளது.

லான்செட் சுவாச மருத்துவத்திற்கான இதழ் இந்த முடிவுகளை வெளியிட்டுள்ளன.

- BBC Tamil - 6 Aug. 2016

**நிலவில் மனித சாம்பலை புதைக்க 30 லட்சம் டாலர் கட்டணம் பு 2017ல் வர்த்தக சேவையை தொடங்கும் மூன் எக்ஸ்பிரஸ்**

கடந்த வாரத்தில் மூன் எக்ஸ்பிரஸ் என்ற தனியார் நிறுவனம் சந்திரனுக்கு விண்கலம் மூலம் பயணம் மேற்கொள்ள அமெரிக்க விமான போக்குவரத்துக் கழகத் திடம் அனுமதி பெற்றுள்ளது. வர்த்தக ரீதியான இந்த பயணத்தில் மனித சாம்பலை நிலவுக்கு எடுத்துச் செல்லவும் அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த விண்கலத்தில் மனித சாம்பலை ஏற்றிச் செல்ல ஒரு கிலோவுக்கு 30 லட்சம் டாலர் என கட்டணத்தை இந்நிறுவனம் நிர்ணயித்துள்ளது.

2017-ல் நிலவில் தரையிறங்குவதற்கான பயண திட்டத்தை திட்ட மிட்டுள்ளது. விண்வெளி பயணத்துக்கு முதன் முதலில் அனுமதி வாங்கிய தனியார் நிறுவனம் இதுவாகும்.

The Hindu August 10, 2016

**பென்னு : பூமியோடு மோதல் நிகழ்த்த 0.037% வாய்ப்பு உள்ளது...!**

ஒசைரிஸ் ரெக்ஸ் (OSIRIS-REX) - பூமியின் அருகாமை சிறு கோள் ஆன பென்னு நோக்கிய ஒரு பயணம் மற்றும் பூமிக்கு அருகில் உள்ள உடுகோளுக்கு செல்லும் நாசாவின் முதல் விண்கலம் இது. கேப் கார் னிவலில் இருந்து செப்டம்பர் 8 ஆம் தேதி செலுத்தப்பட இருக்கும் ஒசை ரிஸ் ரெக்ஸ்-ன் விண்வெளி பயணத்திற்கான இறுதி ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு, கிட்டத்தட்ட பூமியின் நெருக்கமான சிறுகோள் ஆன பென்னு 22-ஆம் நூற்றாண்டில் மோதல் நிகழ்த்தலாம். அது சார்ந்த மேலும்


## கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்

**தலைமை அலுவலகம்**

**SHARING LOVE MISSION**
No. 5A/323, Caldwell Colony,
3rd Street, Tuticorin - 628 008.
Tamil Nadu.
Phone : 0461-2375468, 2377737
Cell : 9345675468

**பணித்தள அலுவலகம்**

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Phone : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in Website : www.shalommission.in**

## SHALOM ICT Students Graduation Programme
## August 13th - 2015-2016












## ஷாலோம் ஊழியத்தின்
## அவசர மற்றும் அவசியத் தேவைகள்

● மூத்த சுதேச ஊழியர்களான தலைவர்களுக்கு, ஒவ்வொருவரும் 20 கிராம சபைகளை கண்காணிக்கவும், வெளி ஊழியங்களுக்குச் செல்லவும் ரூ. 50,000/- மதிப்பில் 50 மோட்டார் சைக்கிள்கள் தேவை.

● கிராமங்கள் தோறும் இயேசு திரைப்படத்தின் மூலமாக சுவிசேஷம் அறிவிக்க சுமார் ரூ.40,000 மதிப்புள்ள 8 L.C.D Projector உடனடியாகத் தேவை.

● சுமார் 300 சபைகளுக்கு ரூ. 3500/- மதிப்பில் டோலாக், ஜால்ரா, சிங்கி மற்றும் கிராம சபைகளில் உபயோகப்படுத்தக் கூடிய இசைக் கருவிகள் தேவை.

● 400க்கும் அதிகமான சபைகளில் மின்சார வசதி கிடையாது. வசதிகள் இருந்தாலும் ஒழுங்காக மின்சாரம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட கிராமங்களில் அதிகமான விசுவாசிகள் உள்ள சபைகளுக்கு சுமார் ரூ. 6500/- மதிப்பிலான பேட்டரியுடன் இயங்கக்கூடிய Ahuja, Stranger, speaker Box with Amplifer போன்றஉபகரணங்கள் 300 சபைகளுக்குத் தேவை.









Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



பெயர் : சீமா. B.பாரியா
தகப்பனார் பெயர் : பதமிலால் பாரியா
தாயார் பெயர் : தாவ்ரி பாரியா
படிக்கும் வகுப்பு : B.A I year
இனம் : F
பிறந்த நாள் : 09 01 1997
சொந்த ஊரின் பெயர் :கோடா

**மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:** இவளுடைய தகப்பனார் இயேசுவை அறியாத போது சாராயம் பீடி தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவர் பில்லிசூனியத்தால் பாதிக்கப்பட்டடு. இவரது கை. கால்கள் செயல்படாமல் 3 வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டார். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. ஷாலோம் விசுவாசி எத்ரா பாய் என்பவர் இயேசுவைப் பற்றிக் கூறி. ஷாலோம் ஊழியர். பதியா கராசியா அவர்களிடம் அழைத்துச் சென்றார். அங்கு ஊழியர் ஜெபித்ததில் தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று வாழ்வில் வளர்ந்தார். பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு தன்னை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று தற்போது தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்

**திறமை தாலந்து மற்றும் வாஞ்சை:** சீமா நன்றாக படிப்பாள். வேதம் வாசிப்பாள் ஜெபிப்பாள் விளையாட்டில் ஆர்வமுண்டு. இவளுக்கு 1 சகோதரன் மற்றும் 2 சகோதரிகள் உண்டு.

**ஜெபியுங்கள்:** இவளுக்காக இவளுடைய படிப்பிற்காக நல்ல சரீர சுகத்திற்காக பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**Sponsor's Name : Mrs. Suriakumari Franklin, Chennai**

**ஜெபித்து தாங்க முன் வாருங்கள்**

பிரியமானவர்களே நீங்களும் ஜெபித்து மாதம் ரூ.700 கொடுத்து பீல்ஆதிவாசி மாணவரைத் தாங்க முன்வரலாம். *Shalom Charity Mission*என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை *D.D.*அல்லது மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்தி வையுங்கள்

Owned and Published by V. Devadass from New No.5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S. Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin-628 002. Editor : V. Devadass